RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2431

# The Love of Life in Bharatiar's Poems

K. Santhanalakshmi [a,*]

[a] Department of Tamil, Rajadurai Singam Govt Art's College, Sivaganga-630561, Tamil Nadu, India.

*Corresponding author Email: lakshmisanthana617@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2431

Received: 13-05-2024; Revised: 29-08-2024; Accepted: 07-09-2024; Published: 18-09-2024

**Abstract:** Bharati, popularly known as Mahakavi, was a journalist, poet, freedom fighter and a pioneer of modern poetry. He has praised nature in his works Papa Paatu, Kannan Paatu and Kuyil Paatu. Because of its focus on nature, the poems are characterized by a large number of naturalistic descriptions. Where nature is described, the contributions of living creatures to humans are explained. In his poems, Bharathiyar has mentioned birds like sparrow, crow, chicken, cuckoo, cow, bull, horse, goat, elephant, lion, tiger etc. It emphasizes that children, like winged sparrows, should be able to move freely here and there, on land and in the sky.

**Keywords:** Mahakavi, Bharathiyar, Nature, Children

**Language:** Tamil

## பாரதியாரின் கனவு மெய்ப்பட வேண்டும்

கா. சந்தானலெட்சுமி [அ *]

[அ] தமிழ்த்துறை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை-630561, இந்தியா

### முன்னுரை

பாரதியார் தமிழின் வரம், காலத்தின் தவம், கவிதையின் சிரம் காலத்தை வென்ற காவியத்தலைவன் மானுடத்தின் மகத்துவத்தை கவிதையில் வடித்த கவிச்சிற்பி மகாகவி பாரதியார் ஆவார். இன்று மட்டுமல்ல தமிழுள்ளவரை கவிஞர்களின் பிறப்பிடமாக மகாகவி பாரதியின் கவிதைகள் அமையும். இலக்கியம் மானுடத்தின் மாபெரும் சக்தி என்பதை பாரதியின் கவிதைகள் உணர்த்துகின்றன. பிரபஞ்ச வாழ்வியலுக்கான மகாகவி பாரதியின் கவிதைக் கனவுகளை சமூகவியல் ஆய்வு அணுகுமுறை மற்றும் வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறைகளால் ஆராய்ந்து அக்கனவுகளின் இலக்கு எத்தன்மை வாய்ந்தது என்பதனை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### பாரதியின் கவிதைகளில் - கனவு

தனிமனிதம் சமூகம், தேசியம், பிரபஞ்சம் சார்ந்த நிலைகளில் பாரதியின் கவிதைகள் பிரபஞ்சநோக்கிலே அமைந்துள்ளன. கருத்துக்கனலாக படைப்புக்களின் புதுமையாளராக மகாகவி பாரதியார் திகழ்ந்தார். இதழாளர், கதையாசிரியர், கருத்துப்பட வரைவாளர், கட்டுரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், மாற்றங்களின் வாழ்வியலாளர், சுதந்திரப்பேரொளி எனப் பன்முகங்களை பெற்றிருந்த பாரதிக்கு அவரது கவிதைகளே அவரை உலகறியச் செய்த உந்து சக்தியாக திகழ்ந்தது என்றால் மிகையாகது

சொல் புதிது பொருள் புதிது

பாடியுள்ளார்.' இந்த கலையழகுதான் (Artistic Quality) இலக்கியத்தின் சிறப்பு இயல்புகளுள் முதன்மையானது. சிறப்பு இயல்புகளில் இரண்டாவது இலக்கியத்தின் குறிப்பாற்றலாகும் (Vaiyapuripillai, 2009). இவ்விரண்டும் ஒருங்கே மிளிர வலிமையான கருத்துக்களை பிரபஞ்ச வாழ்வியலான கவிதைச் சொற்கூட்டில் செதுக்கித்தந்தவர் மகாகவி பாரதியார் ஆவார்.

கனவு - எதிர்கால இலக்கு என இங்கே பொருள்படுத்திக் கொள்ளப்படுகிறது. இலக்கியத்தின் இலக்கும் படைப்பாளியின் கனவாகவே திகழ்கிறது. அப்பொழுதுதான் சமூக மாற்றத்திற்கான வித்தாக இலக்கிய படைப்புகள் பிரபஞ்சத்திற்குரியனவாகின்றன.

பெண் விடுதலை, மண்ப்பயனுறல், பாட்டுத்திறத்தாலே வையத்தை பாலித்திடல் வானகம் இங்கு தென்படல் என்ற நிலைகளில் பாரதியின் பிரபஞ்ச வாழ்வியலுக்கான கனவுகளை இக்கட்டுரை காண விழைகிறது.

## பெண் விடுதலை வேண்டும்

'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற அவரின் கவிதையில் பெண் விடுதலை வேண்டும் என்ற வரி முக்கியமானது. மானுடத்தின் சரிபாதியான பெண்களின் நிலைப்பாடு சுதந்திர இந்தியாவிலும் சாதனை பாதி வேதனை மீதியாகவே உள்ளது. நிமிர்ந்த நன்னைடயும், நேர் கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச்செருக்கும் உடையவர்களாக பெண்கள் திகழ வேண்டும் என பெண்ணினத்திற்கு உரிய வாழ்வியல் நெறியை வகைப்படுத்தி தந்துள்ளார். நல்ல வாழ்க்கை ஞானத்தின் செருக்கால் அமைய வேண்டும். ஞானம் தரும் பெண் கல்வியின் அவசியத்தை பாரதியார் தனது படைப்புக்களில் சுட்டியுள்ளார்.

இன்று பெண்கல்வியின் வளர்ச்சியினால் பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளனர் எனலாம்' கல்விகற்ற புதுமைப் பெண்களே பாரதியாரின் கவிதைகளில் முதன்மை பெற்றனர். அச்சொல்லாட்சியே இன்று கல்லூரிகளில் படிக்கும் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் 'புதுமைப் பெண்கள்' திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. படிக்கின்ற காலத்தில் பெண்களின் கல்விகள் செயல்பாடுகளுக்கு இத்திட்டம் சிறப்பானதாக அமைகிறது என்று பாரதியார் கனவு கண்ட பெண்கல்வி இன்று சமூகத்தில் பரவலாக்கப்பட்ட விஷயமாக இருப்பதே சிறப்புடையதாகும். பாரதியாரின் படைப்புகளில் பெண்கள் தனது வளர்ச்சியை நோக்கியே பயணிக்க வேண்டும் என்ற கருத்தியலே முன்வைக்கப்படுகிறது.

## கற்பு

கற்பு என்ற விஷயமும் பெண் கல்விக்கும், குழந்தை திருமணம், விதவை மறுமணம், பொருளாதார சுதந்திரம் ஆகிய பெண்ணியம் சார்ந்த செயல் திறன் வெளிப்பாட்டிற்கு மாபெரும் தடையாக உள்ளது. அதுவே பெண்ணின் பலவீனமாக கருதப்படுகிறது. வன்புணர்ச்சியில் ஈடுபட்ட ஆண் பலமானவன் ஆகிறார். அது அவமானத்தின் சின்னமாக அவனை அடையாளப்படுத்துவதில்லை. பதிலாக வீரனாக்குகிற தவறான எண்ணங்களையே சமூகம் கொண்டிருப்பதால்தான் மணிப்பூர் பெண் வதைகள் நிகழ்ந்துள்ளன. 'பிறன் மனை நோக்கா பேராண்மை' என்ற வள்ளுவனின் வாக்கு இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது. பெண்ணின் பாதுகாப்பும் உடலியல் மீதான அத்து மீறல்களும் நிறுத்தப்படும் பொழுதே பெண்களின் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படுகிறது.

'சார்லஸ் பன்ச் பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்கிறார்.' பெண்ணின் உரிமைகளும் உரிமை சார்ந்த வளர்ச்சிகளும் சமூக மாற்றத்திற்கு வழிவகுப்பன என்பது பெண்ணியத்தின் உயிர்நாடியாக உள்ளதை உணர முடிகிறது (Prema, 2021).

எந்தவொரு உச்சத்தைத் தொட்டாலும் கற்பு என்ற கோட்பாடு பெண்ணின் ஆளுமையை கேள்விக்குறியாக்குகிறது. கல்வி சார் செயல்பாடுகளுக்கு கூட இந்நிலை தொடர்வது சமூகத்தின் மலினத்தையே காட்டுகிறது. உடலியல் மீதான அத்துமீறல்களை 'கால் கழுவி வருதல்' போன்று

மறக்கின்ற நிலைக்கு பெண்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். உடலியல் சார்ந்த வதைகள், அவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதைத் தவிர்த்துவிட்டு பெண்கள் தங்களது வளர்ச்சி நோக்கியே பயணிக்க வேண்டும். 'கற்பு' என்ற கருத்தியலே, பெண்கல்வி, குழந்தைதிருமணம், விதவை மறுமணம், பொருளாதார சுதந்திரம் ஆகிய பெண்ணியம் சார்ந்த செயல்திறன் வெளிப்பாட்டிற்கு தடையாக உள்ளதை உணர்ந்த மகாகவி பாரதியாரே முதன் முதலாக,

'கற்பு என்று சொல்ல வந்தால் அதை

இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம்'

என்று உரக்கப் பாடினார். கற்பு இன்றுவரை இருகட்சிக்கும் (பெண்-ஆண்) பொதுமை ஆகாமல் தான் உள்ளது என்பதே நடப்பியல் உண்மையாகும். 'தற்காத்து' என்று வள்ளுவப பெருந்தகை அன்றே கூறிவிட்டார். பெண் என்றும் எல்லாவிதச் சூழல்களிலும் தன்னைத்தானே காப்பவளாக இருக்க வேண்டும்.ஆதிசக்தியின் அடையாளமாகத் தன்னை உணரவேண்டும். கற்புக்கரசி பதிவிரதை, பத்தினி போன்ற சொற்கள் பெண்ணின் கற்பினை பறைசாற்றும் வண்ணம் உள்ளன. ஆனால் ஆணின் கற்பினை பறைசாற்றும் சொற்கள் இன்றுவரை இல்லை. பெண்ணின் திருமணம் சார்ந்த அடையாளங்களும் அவளின் பெயருக்கு முன்னர் இடப்பெறும் ஒட்டுக்களும் பெண்ணின் கற்பின் குறியீடுகளாகவே உள்ளன.

கால மாற்றத்திற்கு ஏற்ப கலாச்சார மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன. அவைகளும் பெண்ணின் அறிவுசார் ஆளுமைக்கு அடித்தளமிட்டால் பாரதியின் புதுமைப்பெண் கனவு முற்றிலும் மெய்ப்படும் என்பது தெளிவாகிறது.

## மண் பயனுறல் வேண்டும்

'மண்' என்பது குறியீடாகும். மண் என்பது உயர்திணை, அஃறிணை இரண்டினையும் உள்ளடக்கியது. மண் பயனுற வேண்டுமெனில் தனிமனித சமூக வாழ்வியல் சிறக்கவேண்டும் அதற்கான வழிகளை பாரதியார் தனது கவிதைகளில்

"இன்னமுதைக் காற்றிடை கலந்தது போல

மின்னற் சுவை போல"

வெளிப்படுத்தியுள்ளார். அவன் மனம் வானம் போல் பரந்து விரிந்தது, எத்துணையும் பேதம் உறாது எவ்வுயிரும் தன் உயிர்போல் எண்ணியதோடு மட்டுமன்றி உயிரற்றவையாகக் கருதப்படும் பொருள்கள் அனைத்தையுமே தனக்கு ஈடாக நினைத்து நெகிழ்ந்தான் (Ravi, 2007). அதனால் மண் பயனுற வேண்டும் என்று கூறினார்.

## காணிநிலம் வேண்டும்

கேட்டேன், வேண்டும் என்னும் முடிவுகளைக் கொண்ட பாடல்கள் எல்லாம் அவரின் எதிர்காலக் கனவுகளின் வெளிப்பாடே எனலாம். அனைத்து உயிர்களையும் பாடிய கவிஞன் என்பதால்தான் காணிநிலத்திலே தென்னை மரங்களும் நிலாவொளியும் குயிலோசையும் வேண்டும் என்கிறார்.

எந்தன் பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வேண்டும் என்ற வரிகளில் பிரபஞ்சத்திற்கு பயன்படும் கவித்துவம் பாரதியின் தனித்துவம் என்பது புலனாகிறது. உலகெங்கும் பாரதியின் பாடல்கள் படிக்கப்பட்டதை அவரே பதிவு செய்து உள்ளார்.

'பிரான்ஸ்னென்னும் உயர்ந்தபுகழ்

நாட்டிலுயர் புலவோரும்

பிறரும் ஆங்கே

விராவு புகழ் ஆங்கிலத் தீங்

கவியரசர் தாமும் மிக

வியந்து கூறிப் பராவி' என்றன்

தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்துப் போற்றுகிறார். உலகளவில் பாரதியார் ஏற்கப்பட்டு இருக்கிறார் என்பதை அறிந்து பெருமைப்படுகிறோம். 'வெளிநாட்டில் 1995இல் பதிப்பிக்கப்பட்ட மெர்ரியம் வெப்ஸ்டர் இலக்கியக் கலைக்களஞ்சியம் (Mariam wbstors encyclopedia of Literature) பாரதியார் வரலாற்றை சுருக்கமாகத் தந்திருக்கிறார் (Ramchandran, 2002). உலகளாவிய நிலையில் சமூகத்திற்கு பாரதியின் பாடல்கள் பயன்பட்டதைக் காண முடிகிறது. உலகளாவிய சிந்தனைப் பொதுமையை மகாகவி பாரதியாரின் கவிதைகள் வெளிப்படுத்துவதாலே அவர் உலகக்கவி எனப் போற்றப்படுகிறார். 'வையத் தலைமை கொள்' என்ற பாரதியின் ஆத்திச்சூடி வரியும், பாரதியின் உலகளாவிய கவி ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

'எந்தக் கவிஞனுடைய படைப்புக்கள் அவன் நாட்டினரால் அவன் மொழியினரால் மட்டுமன்றி பிறராலும் மதிக்கப்படுகின்றவோ அக்கவிஞனே உலகக்கவி என்றும் பொருள் கொள்ளலாம் கடல் தாண்டும் பறவையைப் போல காலத்தைத் தாண்டும் பாரதியின் கவிதைகள் என்றால் வியப்பில்லை. 'விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக் குருவியைப் போல' என்ற வரிகள் பாரதியின் பொதுவெளிச் சிந்தனையை உணர்த்துகின்றன.

## நல்லவேயெண்ணல் வேண்டும்

நல்ல எண்ணங்கள் இருக்கும் பொழுது நானிலம் சிறக்கும் என்பது பாரதியின் எண்ணமாக இருந்தது. சிந்து நதியின் மிசை நிலவில் சேரநாட்டு பெண்களுடன் தெலுங்கு பாட்டிசைத்து தோணி ஓட்டி வர கனவு கண்டவர் சிங்களத் தீவிற்கு பாலம் அமைத்து அண்டை நாடுகளுடன் அன்பு பாராட்ட மகாகவி பாரதியார் விழைந்தார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்று வரிகளுக்கு ஏற்ப நாடு, இனம், மொழி கடந்த மனித சங்கமத்தை பாரதியார் தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால் இக்கருத்துக்கள் இன்றும் கனவாகவே உள்ளது. மொழிவாரி மாநிலப் பிரிவினைகளும் மக்கள் இடர்பாடுகளும் இன்று வரைத் தொடர்வதைக் காணமுடிகிறது. மொழிப்பிரிவினையால் மனித சமூகம் மாறுபடலாகாது என்ற கருத்தினையும் பாரதியார் தனது படைப்புக்களில் வெளிப்படுத்தி உள்ளார். ஒவ்வொரு மொழியும் போற்றப்படுவதோடு தாய்மொழிப் பற்றும் வேண்டுமென பாரதியார் கூறியுள்ளார்.

## தமிழ்மொழிக் கனவு

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிய மொழி எங்கும் இல்லை என்கிறார். தமிழ் மொழியில் எத்தகைய செயல்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை,

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்

தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்

இறவாத புகழுடைய புதுநூற்கள்

தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்'

என பாரதியார் தனது கவிவரிகளில் குறிப்பிட்டுள்ளார். மொழி மனித நாகரிக இயக்கத்தோடு தொடர்புடையது. அதனால் மொழி காலந்தோறும் வளர்வதற்குரிய கூறுகளை உள்ளடக்கியதாக அமையவேண்டும். அதற்கு மொழியில் படைக்கப்படும் படைப்புக்கள் அடித்தளமாகின்றன. அடித்தளம் சிறக்க வேண்டும் என்பதே பாரதியின் கனவு வெளிப்பாடாக இருந்தது. அக்கனவின் படைப்புக்களே பாஞ்சாலி சபதமும் குயில் பாட்டும் ஆகும்.

## பாஞ்சாலி சபதமும் குயில் பாட்டும்

பாரதத்தின் விடுதலை குறித்த எதிர்கால கனவே பாஞ்சாலி சபதம் என்ற குறுங்காப்பியமாகும். பஞ்ச பாண்டவர்களை பாரத மக்களாகவும் பாஞ்சாலியை பாரதத்தாயாகவும் உருவகித்து குறியீட்டு உத்தியில் பாரத தேசத்தின் விடுதலை குறித்த தனது கனவை பாஞ்சாலி சபதமாக பதிவு செய்துள்ளார். சுதந்திரம் இல்லாத காலத்திலும் சுதந்திரமான எண்ணங்களோடு வாழ்ந்தவர் பாரதியார் என்பதால் தான் சுதந்திர இந்தியாவின் செயல்பாடுகளையே தனது கவிதைகளில் படைத்தார். அக்கனவுகளே இன்று 'சந்திராயன் ஏவல்'வரை மெய்ப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

குயில் பாட்டை முற்றிலுமாக 'துயிலிடைக் கனவு' என பாரதியாரே குறிப்பிட்டாலும் அதி அற்புதமான கவியாடல்கள் நிறைந்த இயற்கைசார் படைப்பாக குயில் பாட்டு இன்றுவரை திகழ்கிறது. இத்தகைய படைப்பு ஆக்கங்களே மொழிக்கு வளம் சேர்க்கும் என்பது பாரதியின் கனவாகவும் நிகழ்வாகவும் இருந்தன. அதனால் இன்றும் என்றும் வரும் கவிஞர்களின் கருவறையாக மகாகவி பாரதியாரின் கவிதைகள் நிகழும் என்பது உறுதியாகின்றது.

## வானகம் இங்கு தென்படல் வேண்டும்

மக்களின் வாழ்வியலால் வானகமே இங்கு தென்படும் நிலை ஏற்பட வேண்டும் என்பது மகாகவி பாரதியின் கனவாகும்.

'காக்கை குருவி எங்கள் சாதி

நீள்கடலும் மலையும் எங்கள் கூட்டம்'

என்ற பாரதியின் கவிவரிகள் பிரபஞ்ச வாழ்வியலை உணர்த்துகின்றன. மானுட வேறுபாடுகள் இன்றி எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலை ஏற்பட்டால் வானக வாழ்வியலை மண்ணிலே வாழலாம் என்பதே மகாகவி பாரதியாரின் மாபெரும் கனவாக இருந்தது. அதனால் தான் 'தெய்வம் நீயென்று உணர் என்று ஆத்திச்சூடி பாடினார். தெய்வ நிலை பூவுலகிலே மானிடருக்குச் சாத்தியமாகும் என்பது பாரதியின் வாழ்வியல் கனவாக இருந்தது எனலாம். இது இன்றுவரை கனவாகத் தான் உள்ளது. மானுட இனத்தின் பேதமை அறிவு அவர்களின் வாழ்வியலுக்கான செவ்வியலைத் தருவதற்குப் பதிலாக போர்க்காலச் சூழலையும் பேரிடர்களையும் ஏற்படுத்தித் தருகிறதெனலாம். இந்நிலை மாற மனித மனம் மாறுபட வேண்டும். அதற்கு மகாகவியின் கவிதைகள் உதவும் என்பது உறுதி.

## முடிவுரை

பாரதியின் கனவு தன்நிலை, உலகியல் எனப் பன்முகப் பார்வை கொண்டதாகும். அவரது கனவுகள் மண்பயனுறுவதற்கும் மானுடம் பயனுறுவதற்கும் வானகம் இங்கு தென்படுவதற்கும் ஏற்றதாக அமைந்த காலசூழற்சியில் அவரின் கனவு மெய்ப்பாடுகள் கடக்க வேண்டியவை பலவாகும் என்பதனையே இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. மகாகவியின் கனவுகள் மெய்ப்படுவது இளைய சமுதாயத்தின் வாழ்வியலில் உள்ளது. அதற்கான வழிமுறைகளை பாரதியாரின். படைப்புக்களை வாசிப்பதால் நேசிப்பதால் கண்டறியலாம் என்பதை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

## References

Prema, R. (2021) Penniyam, Paari nelaiyam, Chennai, India

Ramchandran, T.N. (2002) Bharathi pattriya Ethirkala Aivukal, Tamil University, Thanjavur, India

Ravi, K. (2007) Minner Chuvai, LKM Publication, Chennai, India

Vaiyapuripillai, S. (2009) Ilakkiya sinthanaikal, Paari nelaiyam, Chennai, India

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Santhanalakshmi, The Love of Life in Bharatiar's Poems, Indian Journal of Multilingual Research and Development, Vol 5, Iss 3, (2024) 1-6. DOI: https://doi.org/10.54392/ijmrd2431